பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
12 10 2026 MONDAY   12 40 PM
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- அமைதி, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கு உலக நாடுகளின் ஒருங்கிணைப்பு அவசியம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.
- அரசியல் சாசன உரிமைகள் மீறப்படும் பொழுது, நீதிமன்றங்கள் தலையிட்டு தீர்வு காண வேண்டும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சூரியகாந்த் வலியுறுத்தியுள்ளார்.
- நீர்மூழ்கி எதிர்ப்பு கப்பல் I N S Mangrol இன்று இந்திய கடற்படையுடன் இணைக்கப்பபட்டது.
- ரஷ்யாவிலிருந்து டீசல் இறக்குமதி செய்வதற்கான அமெரிக்காவின் முடிவுக்கு அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.
- ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் North East United அணி இன்று Mohun Bagan அணியை எதிர்கொள்கிறது.

>>>>>>><<<<<<<

அமைதி, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கு உலக நாடுகளின் ஒருங்கிணைப்பு மிகவும் அவசியம் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தேசிய ராணுவக் கல்லூரி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், பருவநிலை மாற்றம், தீவிரவாதம் போன்ற பிரச்சினைகளை ஒருங்கிணைந்து எதிர்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

வசுதேவ குடும்பகம் – இந்தியாவுக்கு மட்டுமின்றி உலகத்திற்கே பொருந்தும் என்று அவர் கூறினார்.

பேரிடர் காலங்களில் உலக நாடுகளுக்கு உதவும் நாடுகளில் இந்தியா முன்னிலையில் இருப்பதாக திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

அரசியல் சாசன உரிமைகள் மீறப்படும் பொழுது, நீதிமன்றங்கள் தலையிட்டு தீர்வு காண வேண்டும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சூரியகாந்த் வலியுறுத்தியுள்ளார்

புதுதில்லியில் இன்று, தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் 33-ஆவது நிறுவன நாள் விழாவில் உரையாற்றிய அவர், அரசியல் சாசனம் ஒவ்வொரு குடிமகனுக்கும் சமத்துவம், நீதி, சுதந்திரத்தை உறுதி செய்துள்ளதாக கூறினார்.

மனித உரிமை ஆணையம், சுகாதாரம், உணவு, வாழ்வாதாரம், சுற்றுச்சூழல் ஆகியவற்றுடன் இணைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

மனித உரிமை பாதுகாப்புக்கு மனித உரிமை ஆணையத்தின் பங்கு இன்றியமையாதது என்று அவர் குறிப்பிட்டார்.

கடந்த 33 ஆண்டுகளில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தேசிய மனித உரிமைகள் ஆணையத்தில் 24 லட்சம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கூறிய அவர், இதில் 23 லட்சம் வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் கைபேசி செயலி மூலம், பொதுமக்கள் எளிதாக புகார்களை பதிவு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நீதிமன்றத்தை அணுக அனைவருக்கும் உரிமை இருப்பதாக தெரிவித்தார்.

மக்கள் பிரதிநிதி உட்பட ஒவ்வொரு குடிமகனும் நீதிக்காக உச்சநீதிமன்றத்தை அணுகலாம் என்று அவர் கூறினார்.

உச்சநீதிமன்றத்தின் வாயில்கள் திறந்திருக்கும் என்று கூறிய திரு சூரியகாந்த், அனைத்துத் தரப்பினரின் மனுக்களை வரவேற்பதாக தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

சுதந்திரப் போராட்ட வீரரும், சமூக ஆர்வலருமான டாக்டர். ராம் மனோகர் லோஹியாவின் நினைவு நாளான இன்று பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் அஞ்சலி செலுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், டாக்டர். ராம் மனோகர் லோஹியாவின் வாழ்க்கை சமூக நீதிக்கும், அரசியல் நேர்மைக்கும் ஊக்க சக்தியாக திகழ்வதாக கூறியுள்ளார்.

சமூகத்தின் அனைத்துத் தரப்பினரையும் ஒருங்கிணைத்து கொண்டு செல்ல அவரது எண்ணங்களை பின்பற்றி முன்னேறி வருவதாக திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

நீர்மூழ்கி எதிர்ப்பு கப்பல் I N S Mangrol இன்று இந்திய கடற்படையுடன் இணைக்கப்பட்டது.

மும்பையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்திய கடற்படை வைஸ் அட்மிரல் Sanjay Vatsayan தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்த கப்பல் சேர்க்கப்பட்டது.

கொச்சின் கப்பல் கட்டும்தளத்தில் வடிவமைக்கப்பட்ட இந்த கப்பலுக்கு குஜராத்தின் Junagadh மாவட்டத்தில் உள்ள மீனவ துறைமுகமான Mangrol-ன் பெயர் சூட்டிப்பட்டுள்ளது.

கடந்த 2004-ஆம் ஆண்டு ஏப்ரல் 7-ஆம் தேதி வரை கடற்படையில் சேவையாற்றிய I N S Mangrol கப்பலின் பெயர் தற்போது மீண்டும் சூட்டப்பட்டுள்ளது.

இந்த கப்பலின் 80 சதவீதம் உள் நாட்டு தயாரிப்பில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் தயாரிப்போம், சுயசார்பு இந்தியா திட்டத்தின்கீழ், கொச்சி கப்பல் கட்டும் தளம் இந்த கப்பலை தயாரித்துள்ளது.

இந்த கப்பலில் Abhay Sonar Sensor கருவிகள், நீர்மூழ்கி கப்பல்களை தாக்கும் திறன் கொண்ட ராக்கெட் ஏவுதளம், Mareech Torpedo ஏவுதளங்கள் இடம்பெற்றுள்ளன.

>>>>>>><<<<<<<

நவராத்திரியின் இரண்டாவது நாளான இன்று பிரம்மாச்சாரிணி தேவியின் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், பிரம்மாச்சாரிணி தேவி, தியாகம், தவம் மற்றும் உறுதி ஆகியவற்றுக்கு எடுத்துக்காட்டாக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

தைரியமும், சுய கட்டுப்பாடும் ஏற்பட பிரம்மாச்சாரிணியின் அருள் நாட்டு மக்களுக்கு கிடைக்கட்டும் என்று திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

மத்தியப்பிரதேசத்தில் Kanha காப்புக் காடுகளில் காட்டெருமைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் டாக்டர் மோகன் யாதவ் தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தின் ஒருபகுதியாக அஸ்ஸாமின், காசிரங்கா தேசிய வனப்பூங்காவிலிருந்து கொண்டுவரப்பட்ட எட்டு காட்டெருமைகள் காப்புக் காடுகளில் விடப்பட்டன.

அடுத்த மூன்றாண்டுகளில் 50 காட்டெருமைகளை இந்த பகுதியில் கொண்டுவர திட்டமிட்டுள்ளதாகவும் டாக்டர் மோகன் யாதவ் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

ஜம்மு காஷ்மீரில் சிறப்பு தீவிர வாக்காளர் சேர்ப்பு முகாம் நடைபெற்றது.

கடந்த இரண்டு நாட்களில் காலை 9 மணிமுதல், மாலை ஐந்து மணிவரை அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கான முகாம் நடைபெற்றது.

அனைத்து தகுதியான வாக்காளர்களும் பெயர் சேர்ப்பதற்கும், திருத்தங்களை மேற்கொள்வதற்கும் இம்முகாமில் ஏற்பாடு செய்யப்பட்டதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீர் தலைமை தேர்தல் அதிகாரி திரு சஞ்ஜீவ் வர்மா தலைமையில், இந்த முகாம்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

>>>>>>>><<<<<<<

"மக்கள் நலனே தேசத்தின் நலன்" என்பதை, தாரக மந்திரமாகக் கொண்டு செயல்பட்டு வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி,

25 ஆண்டுகள் பொதுசேவையை நிறைவு செய்துள்ள நிலையில், அவரது தொலைநோக்குப் பார்வையின் கீழ், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில், மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

இது தொடர்பான சிறப்புத் தொகுப்பில் இன்று, மை பாரத் இயக்கம் குறித்து இடம்பெறுகிறது.

(வாய்ஸ் ஓவர் - Voice Over - 67 Sec.)

( மத்திய அரசு மை பாரத் கேந்திராவை கடந்த 2023 -ஆம் ஆண்டு அக்டோபர் 31-ஆம் தேதி தொடங்கியது.

நாட்டின் வளர்ச்சிக்கு 21-ஆவது நூற்றாண்டில் மை பாரத் முக்கிய பங்கு வகிக்க உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இளைஞர்களை நாட்டின் வளர்ச்சிக்காக ஒருங்கிணைத்து செயல்படுவதே இதன் நோக்கமாகும் என்று அவர் கூறியுள்ளார்.

சத்தீஸ்கர் மாநிலத்தில் மை பாரத், இளைஞர்களின் பங்களிப்புடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

மை பாரத் மூலம், சத்தீஸ்கர் மாநிலத்தின் இளைஞர்கள் தேசிய அளவில் தங்களது திறன்களை வெளிப்படுத்தி வருவதாக மை பாரத்தின் மாநில இயக்குநர் திரு Arpit Tiwari தெரிவித்துள்ளார்.

இளைஞர்களிடையே தலைமைத்துவப் பண்பு, பொறுப்புணர்வு ஆகியவற்றை ஏற்படுத்துவதே மை பாரத்தின் நோக்கமாகும்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட இளைஞர்களின் பங்களிப்பை உறுதி செய்ய இது வழிவகை செய்யும்

*நாட்டின் வளர்ச்சிக்காக இளைஞர்களின் ஆற்றலை இணைத்து, மை பாரத் செயல்பட்டு வருகிறது)*

>>>>>>><<<<<<<

ரஷ்யாவிலிருந்து டீசல் இறக்குமதி செய்வதற்கான அமெரிக்காவின் முடிவுக்கு அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

யுக்ரைன் மீதான போரை நிறுத்தும் வரை ரஷ்யா மீது கடந்த 2022-ஆம் ஆண்டு அமெரிக்கா வர்த்தக தடை விதித்திருந்தது.

இந்த தடையை மீறும் செயல் இது என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறை கூறியுள்ளனர்.

அதிபர் டோனல்டு ட்ரம்ப் தலைமையிலான அரசு அமெரிக்க நாடாளுமன்றத்தில் இதுதொடர்பாக விவாதிக்கவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டின் தொலைபேசியில் திரு ட்ரம்பை தொடர்பு கொண்டதையடுத்து, ரஷ்யாவிலிருந்து 3 லட்சம் டன் டீசல் இறக்குமதி செய்ய முடிவெடுக்கப்பட்டது.

ரஷ்யா மற்றும் ஈரான் மீது பொருளாதார தடை விதிக்க அதிபர் திரு டோனல்டு ட்ரம்புக்கு முழு அதிகாரம் அளிக்கும் தீர்மானம் கடந்த வாரம் அமெரிக்க நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

>>>>>>><<<<<<<

சவுதி அரேபியா மீது நான்கு ஏவுகணை தாக்குதல் நடத்தியதாக ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ரியாதின் கிங் காலித் சர்வதேச விமான நிலையம், Shugadam எரிவாயு நிலையம், Tanajib எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், Dammam சர்வதேச விமான நிலையம் ஆகிய இடங்களில் தாக்குதல் நடத்தியதாக அவர்கள் கூறியுள்ளனர்.

சவுதி அரேபியாவில் உள்ள விமான நிலையங்களுக்கு விமானங்களை இயக்க வேண்டாம் என்றும் விமான நிறுவனங்களுக்கு அந்த அமைப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், மெக்கா, மதீனா புனித தலங்களுக்கு உள்ள விமான சேவைகள் மீது தாக்குதல் நடத்தப்ப மாட்டாது என்றும் ஹவுதி அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

>>>>>>><<<<<<<

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் North East United அணி இன்று Mohun Bagan அணியை எதிர்கொள்கிறது.

குவஹாத்தியில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

>>>>>>><<<<<<<

ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று தமிழகத்திற்கு எதிரான ஆட்டத்தில் ராஜஸ்தான் முதல் இன்னிங்ஸில் 363 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

ஜெய்ப்பூரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் தமிழக அணியின் பந்துவீச்சாளர்கள் Deepesh, Saravana Kumar ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

>>>>>>>END<<<<<<<